**Revised**

செய்திக் குறிப்பு எண்.449 நாள் 20.11.2006

## செய்திக் குறிப்பு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இன்று முதல் பல்வேறு துறைகளின் பணிகள் குறித்த ஆய்வினை தொடர்ந்து செய்யவுள்ளார்கள். இன்று முதல் கட்டமாக நிதி, திட்டம், நெடுஞ்சாலைத் துறைகள் பற்றிய ஆய்வு நடைபெற்றது. மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் அவர்களும், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் வெள்ளக் கோவில் சாமிநாதன் அவர்களும், மற்றும் தலைமைச் செயலாளர், நிதித் துறை செயலாளர், திட்டத் துறை செயலாளர், நெடுஞ்சாலைத் துறை செயலாளர், பொறியாளர்கள் முதல் அமைச்சர் நடத்திய இந்த ஆய்வில் கலந்து கொண்டார்கள்.

இந்த ஆய்வின் போது நெடுஞ்சாலை குறித்து எடுக்கப்பட்ட முக்கிய முடிவு வருமாறு :–

16–11–2006ஆம் தேதியிட்ட அரசாணை நிலை எண். 242இன் படி சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (CRIDP)

1079 கிலோ மீட்டர் நீளத்திற்கான மாநில நெடுஞ்சாலை (State Highways) மேம்படுத்தும் பணியை 284 கோடி ரூபாய் செலவிலும்,

1390 கிலோ மீட்டர் நீளத்திற்கான மாவட்ட முக்கிய சாலைகளை (Main District Roads) 295 கோடி ரூபாய் செலவிலும்,

1355 கிலோ மீட்டர் நீளத்திற்கான மாவட்ட இதர சாலைகளை (Other District Roads) 143 கோடி ரூபாய் செலவிலும் ஆக மொத்தம் 3824 கிலோ மீட்டர் நீளத்திற்கு தமிழகம் முழுவதும் 722 கோடி ரூபாய் செலவில் சாலைகளை மேம்படுத்தும் பணிகளை உடனடியாகத் தொடங்குவதற்கு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள்.

மேலும் ஆதி திராவிடர் குடியிருக்கும் பகுதிகள் வழியாக செல்லும் நெடுஞ் சாலைகளை மேம்படுத்த ரூ. 126 கோடி மதிப்புள்ள சாலைப் பணிகளுக்கும் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார். ஒட்டுமொத்தமாக 848 கோடி ரூபாய் செலவில் நெடுஞ்சாலை மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள முதலமைச்சர் கலைஞர் அனுமதியளித்திருக்கிறார்கள்.

வெளியீடு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9